# 'எனது வெளியேற்றத்துக்கு காரணம் கொழும்பு பத்திரிகைகளே! நாளை சென்னை செல்கிறேன்'

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 10-8-86 ஞாயிறு (ஆடி 25 துல்ஹ 3) முழக்கம் 187

## ஹம்ப்ரி ஹோக்ஸ்லி ஈழமுரசுவுக்கு பேட்டி

"தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை, அபிலாஷைகளை நான் நேர்மையாகவே தெரியப்படுத்தினேன். சில சிங்களத் தீவிரவாதிகள் இதனை விரும்பவில்லை. சிங்களவர்களின் கையிலுள்ள கொழும்புப் பத்திரிகைகள் இதற்கு துணையாக நின்று எனக்கு எதிராக எழுதின. இதனால் நான் இலங்கையை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளேன்" என்று பி. பி ஸி. யின் கொழும்பு நிருபர் திரு. ஹம்ப்ரி ஹோக்ஸ்லி நேற்றிரவு 'ஈழமுரசு'வுக்குத் தெரிவித்தார். கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் திரு ஹோக்ஸ்லி நேற்றிரவு தொலைபேசியில் 'ஈழமுரசு'வுடன் உரையாடினார். நான் எங்கு சென்றாலும் உண்மையை எழுதுவேன். தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு தனது ஆதரவு என்றுமிருக்குமென்றும் அவர் சொன்னார். நாளை காலை எயர்லங்கா விமானம் மூலம் சென்னைக்குச் செல்லும் தாம் சில தினங்கள் அங்கு தங்கியிருக்கப்போவதாகச் சொன்னார். போராளிகள் பிரமுகர்களை சந்திக்க வேண்டியேற்படலாம் எனவும் திரு. ஹம்ப்ரி ...6ம் பக்கம் பார்க்க

# திருமலையில் 2 தாக்குதல்

# ஆறு ராணுவத்தினர் பலி!

## அகதி முகாமில் 4 தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தின் இரு இடங்களில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறான தாக்குதல் சம்பவங்களின்போது ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அகதிகள் முகாமிலிருந்து நாலவரும், மற்றொரு முஸ்லிம் நபரும் படையினரின் பதில் தாக்குதலில் பலியாகினர்.

இவ்விரு சம்பவங்களும் மொரவேவா, கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

மொரவேவாவிலுள்ள முதலிக்குளம் என்ற இடத்திலிருந்து கஜுவத்தை என்ற கிராமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாதுகாப்புப் படையினர்மீது நேற்று தீவிரவாதிகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது இரு படை வீரர்கள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் நேற்றிரவு அறிவித்தது. மேலுமொரு படை வீரர் காயமடைந்தார். அவர் அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை மூதூரிலுள்ள கட்டைபறிச்சான் என்ற இடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது நான்கு இராணுவத்தினர் மரணமானதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இச் சம்பவத்தின்போது முஸ்லிம் நபர் ஒருவரும் காயமடைந்தார். இங்குள்ள அகதி முகாமொன்றுக்கருகில் இச்சம்பவம் நடைபெற்றது. இதனை அடுத்து ஒரு குழந்தையும் மூன்று தமிழர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் அகதி முகாமில் தங்கியிருந்தவர்கள்.

## கட்டைபறிச்சான் தாக்கு விடுதலைப் புலிகள் உரிமை

நேற்று கட்டைபறிச்சானில் ராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு உரிமைகோரி விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

நேற்றுக்காலை 8.30 மணியளவில் கட்டைபறிச்சான் ராணுவ முகாமிலிருந்து எம் மக்களை வேட்டையாடுவதற்காக ஐம்பது இராணுவத்தி —6ம் பக்கம் பார்க்க

### ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

## திருமலை துறைமுக தாக்குதல்; அரசுக்கு 2 கோடி ரூபா நஷ்டம்

திருமலை துறைமுகத்தில் தமது மக்கள் விடுதலைப்படையினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அழிவுத் தாக்குதல் என்றும் இதனால் அரசுக்கு இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் விபரம் வருமாறு:-

திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் "மட்கோவ்" பிரிவின் மீது இம்மாதம் 6ம் திகதி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினால் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் சிறீலங்கா அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட "பொருளாதார அழிவு"த் தாக்குத — 6ஆம் பக்கம் பார்க்க

## படகு கடலில் கவிழ்ந்ததால் வயோதிபர், சிறுவன் பலி

(குருநகர்)

கடந்த சில தினங்களாக வீசிக்கொண்டிருக்கும் பலத்த காற்றுக் காரணமாக நேற்று முன்தினம் பூநகரி கல்முனையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரு வள்ளங்கள் வயிறுவீங்கி ஆற்றுப் பகுதியில் விபத்துக்குள்ளாகி சிறுவன் ஒருவனும், வயோதிபர் ஒருவரும் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வள்ளத்தில் கருவாட்டுச் சிப்பங்களுடன் வந்த இருவர் நீந்திக் கரையை வந்து சேர்ந்தனர். மற்ற வள்ளத்தில் தனது பேரனுடன் வந்த போதே வயோதிபரும், சிறுவனும் விபத்தில் சிக்கிப் பலியாக நேர்ந்ததென்று தப்பி வந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

பலியான இருவரது சடலங்கள் நேற்று மாலைவரை கண்டெடுக்கப்படவில்லை. விபரங்களும் கிடைக்கவில்லை.

## 'கொட்டியா' ஒருவரின் புகையிரத நிலைய அனுபவம்

(வல்வெட்டித்துறை)

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவருடன் கொழும்பு செல்கையில் றம்பாவ என்னுமிடத்தில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறை, பொலிகண்டி, இன்பருட்டியைச் சேர்ந்த வி. சந்திரகாந்திலிங்கம், எஸ். பாலச்சந்திரன், எஸ். கோபாலராசா, ஏ. அருட்குமார், எம். தீவராசசிங்கம், என். சதானந்தம், எஸ் மோகனராசா (முகவர்) ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

தாம் கைது செய்யப்பட்டு சிறையில் இரு வாரங்கள் வைக்கப்பட்டிருந்த பொழுது பலத்த தாக்குதல்களுக்கும், —6ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார சிற்றூழியரின் விசேட படி இடைநிறுத்தம்

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார அலுவலகங்களில் கடமைபுரியும் சில சிற்றூழியர்களுக்கு வேறு உத்தியோக கடமைகளை மேலதிகமாக செய்யும்போது வழங்கப்பட்டு வந்த விசேட படி கடந்த சில மாதங்களாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது அவர்கள் கடமை நேரத்தில் வேறு மேலதிகமான வேலைகள் செய்தால் அதற்கான பிரயாணச் செலவை மட்டுமே சுகாதார திணைக்களம் வழங்குகிறதாம். அதுவும் காசோலையாக வழங்குவதால் அதன் பெறுமதி —6ம் பக்கம் பார்க்க

## நல்லூர் மஹோற்சவம் இன்று காலை ஆரம்பமாகிறது

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தினசரி காலை உற்சவம் பத்து மணிக்கும், மாலை உற்சவம் ஐந்து மணிக்கும் நடைபெறும்

இம்மாதம் 19ம் திகதி மஞ் — 6-ம் பக்கம் பார்க்க

## விஜே வீட்டுக்கும் கிரனைட் வீச்சு

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் செயலாளரும், பிரபல நடிகருமான திரு. விஜய குமாரணதுங்காவின் வீட்டுக்கும் நேற்று கிரனைட் வீசப்பட்டது. இனம் தெரியாதவர்களால் வீசப்பட்ட இந்த கிரனைட் கிளிப் கழற்றப்படாததால் வெடிக்கவில்லை. நேற்று நண்பகல் இரண்டு மணியளவில் இது வீசப்பட்டது. கொழும்பு கின்ஸி வீதியிலுள்ள அவரது வீட்டின் முற்பகுதிப் பூந்தோட்டத்துக்குள் வீழ்ந்த கிரனைட்டை பொலிஸார் எடுத்துச் சென்றனர். சில தினங்களுக்கு முன்னர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வீட்டுக்கும் வெடிக்காத கிரனைட் வீசப்பட்டது தெரிந்ததே.

## கூட்டணி 7 பேர் குழு 14ல் வரும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழுவொன்று ஜனாதிபதியுடன் இரண்டாம் கட்டப் பேச்சு நடத்துவதற்காக இம்மாதம் 14ந் திகதி கொழும்பு வருவது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 16ம் திகதி முதல் 18ம் திகதிவரை பேச்சுக்கள் இடம்பெறும். திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன், வெ. யோகேஸ்வரன், வீ. ஆனந்தசங்கரி, அ. தங்கத்துரை, வண. பிதா ஜோசப் மேரி ஆகிய ஏழு பேரும் இம்முறை வருகின்றனர்.

## நகருக்குள் வந்த இராணுவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முகாமில் இருந்து நகருக்குள் வந்த ராணுவம் மீது தீவிரவாதிகள் குண்டுவீசியபோது ராணுவத்தினரும் பதிலுக்குதிருப்பிச் சுட்டனர். ஆனால் எதுவித சேதம் பற்றியும தெரிவிக்கப்படவில்லையெனினும் ராணுவத்தினர் நகருக்குள் வந்து பொருட்களை வாங்கிச் சென்றனர்.

## ஊழியர் மீது வசாரணை

யாழ். பழைய பூங்காவிலுள்ள காணிப பதிவகத்தில் இடம்பெற்ற முத்திரைக்களவு, உறுதிகள் காணாமல் போனவை சம்பந்தமாக இங்கு கடமையாற்றும் ஊழியர் மீதான விசாரணை நேற்றும் நடைபெற்றது. வடுமுறை தினமொன்றின் —6 ஆம் பக்கம் பார்க்க

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

# வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1987/88

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் 7ம் திகதி (7.9.86) ஆரம்பமாகின்றது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்சிப் பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகஸ்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி** (B.A) **வர்த்தகமாணி** (B. Com)

**விஞ்ஞானமாணி** B. Sc) (கணிதம்) **சட்டமாணி** (LL. B)

விண்ணப்பங்கள் ஓகஸ்ட், 30ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும்பெற ''பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்'' என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9'' x 4'' அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

கிளை: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
101/10, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

R/24060

---

## சவூதி அரேபியா, அபுதாபி
## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23ந், 27ந் திகதிகளில் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (வயது எல்லை 25—40)

அபுதாபிக்கு Cleaners (கிளீனர்ஸ்) வேலையாக செல்ல விரும்புபவர்களுக்கு 4 கிழமைகளுக்குள் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (வயது எல்லை 21—30)

சகலரும் பாஸ்போர்ட், 6 படங்களுடன் நேரில் வரவும்.

முகவரி:-

**K.M. வைத்தீஸ்வரன்,**
கச்சாய் வீதி, கொடிகாமம்.

R/24655

---

## GREENFIELD TRAVEL OPERATORS
## கிறீன்பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்

யாழ்நகர மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

தங்கள் வெளிநாட்டிலுள்ளவர்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமா, அல்லது நீங்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? அப்படியானுல் நீங்கள் எங்கள்கொழும்பு தொலைபேசி(Telephone) நம்பர்:573594 ஊடாக தொடர்பு கொள்ளலாம். இதற்கு வசதியாக எமது ஸ்தாபனம் இலங்கை நேரப்படி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6 00 மணி வரை தங்களுக்கு விசேட சலுகைக் கட்டணத்தில் சேவையாற்றுகிறது.

இதேபோல் எங்கள்கொழும்பு ரெலெக்ஸ் (Telex) நம்பர்:22287 தொடர்புகள் ஏற்படுத்துவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு எம்முடன் நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். இத்துடன் உள்ளூர் தொலைபேசி தொடர்புகளுக்கும் எங்களை நாடுங்கள்.

உரிமையாளர்,
கிறீன்பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்

இல 26, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23875, 22784.
Telex No: 22287

R/24651

---

## புதிய மாணவர்களுக்கான
## ஆங்கில வகுப்புகள்
## பிற்போடப்படுதல்

புதிய மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சையின் முடிவுகள் இம்மாதம் 20ஆம் திகதி பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்படும்.

ஆங்கில வகுப்புகளும் 20—08—86 ஆரம்பமாகும்.

B/1453 —பதிவாளர்

---

## வரிவிளம்பரம்

### நல்லூரில் சகாய விற்பனை

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ. 15ற்கு எமது தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும் அறிவு நூல்களும், கீரைவிதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். — மில்க்வைற், யாழ்ப்பாணம்.

B/1448

### தேவை

தண்ணீர் இறைக்கும் டிலிவரி பைப் 350 அடி உடனடியாகத் தேவை. என். சிவம், 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

B/1452

---

## பிறந்தநாள் வாழ்த்து



❉ சுன்னுகம், சபாபதிப்பிள்ளை வீதி, சந்திரகுமார் லோகநாயகி தம்பதியின் மகன் அஜிருஜ் தனது முதலாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றுர்.

❉ கிளிநொச்சி, யோகராஜா காந்திமதி தம்பதியின் மகன் ரஜனீஸ் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

❉ சுன்னுகம் சுப்பிரமணியம் வீதி, சங்கரலிங்கம் ஜெயராணி தம்பதியின் மகள் நந்தினி இன்று தனது பதின்மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

❉ கச்சேரி நீக்லஸ் லேன், சீவரத்தினம் அன்னராசகுமாரி தம்பதியின் மகள் சுகிர்தா இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

---

## நூல்நிலையம் சீரமைபபு

(வேலணை)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உப-அலுவலகத்திஞல் நிர்வகிக்கப்படும் நூல்நிலையம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

---

## நாடக அரங்கு பயிற்சி வகுப்பு

மக்கள் கலை அரங்கம் ஆறு மாதகால நாடக, அரங்கப் பயிற்சி வகுப்புக்களை சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடாத்தவுள்ளது. நடிப்பு, அரங்க நெறியாள்கை மற்றும் நாடகம் எழுதுதல், மேடை நிர்வாகம், இசையூட்டல், ஒளியூட்டல், ஒப்பனை, காட்சியமைப்பு, நாடக இரசனை போன்ற துறைகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும். பிரதி ஞாயிறு தோறும் காலை ஒன்பது மணிமுதல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

---

# 6-வது மாத நினைவஞ்சலி

## திருமதி புஷ்பராணி சோமலிங்கம்



மலர்வு: 10 — 3 — 1955

உதிர்வு: 9 — 3 — 1986

திங்கள் ஆறு சென்றதம்மா
எங்களை நீ பிரிந்து சென்று
உற்ற உந்தன் குஞ்சனும்
பெற்ற பிதா மாதாவும்
வாடுகிறேம் உனை நினைந்து
வீடு பேறு பெற்றிடுவாய்.

நீ இல்லா வாழ்வின் துயர் நினைந்து உருகும்:

9/6, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.

அன்புக் கணவன்,
பெற்ருர், சகோதரர்,
உற்ருர், நண்பர்கள்.

B/1451

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி

## அந்தியேட்டி அழைப்பு



## ஆறுமுகம் சிவஞானசுந்தரம்

(ஆறுமுகம் அன் சன்ஸ், ஈழமுரசு ஏஜென்ஸ், பரந்தன்)

அன்னை மடியில்: 11-2-1964

ஆள்பவன் பறிப்பு: 28-6-1986

திதி 11-8-1986

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்பு மகனே, உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேம். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்க்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்கட்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். அந்தியேட்டிக் கிரியைகள் பாலாவோடை, காரைநகரில் எமது இல்லத்தில் இன்று நடைபெறும். இவ்வைபவங்களில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் உற்ருர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றேம்.

நன்றி.

பாலாவோடை,
காரைநகர்.

அப்பா, அம்மா,
சகோதரிகள், தம்பி,
மச்சான், மருமக்கள்.

R/1442

---

## வடகோவை இலுப்பையடி விநாயகர் ஆலய திருப்பணிச்சபை

# வேண்டுகோள்

மேற்படி திருப்பணிச் சபையின் நிர்வாக சபைக் கூட்டம் 1-8-86 வெள்ளிக்கிழமை மாலை 5 30 மணிக்கு சபைத் தலைவர் திரு. க. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பணிச் சபையினுல் ஆலய திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணததில் இனிமேல் எவராயினும் திருப்பணி செய்ய விரும்பின் அது ஆலய திருப்பணிச் சபை மூலமாக நடைபெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஆகவே திருப்பணி செய்ய விரும்புவோர் மேற்படி சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

சி. சந்திரசேகரன்
தனுதிகாரி

ச. விக்கினேஸ்வரன்
இணைக் காரியதரிசி

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
3-8-86

R/24636

# போராளிகள் வன்முறையை கைவிட்டால் அவர்களுடன் பேச

# ஜனாதிபதி உடன்படுவார்

வினா: 'ஜே. வீ. பி.' ஓர் அரசியல் கட்சியல்ல என இலங்கைஅரசாங்கம் ஒரு தடையாணை பிறப்பித்தது. இதனை, சட்டப் பிரஷ்டம் எனலாம். அதாவது, சட்டத்தின் பார்வையில் அது ஓர் அரசியற் கட்சி அல்ல என்பதேயாகும். தன்மீது விதிக்கப்பட்ட சட்டப் பிரஷ்டம் நீக்கப்படும்படி 'ஜே. வீ. பி.' கோரியுள்ளது. அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு அவர்கள் கோருகின்றனர்.

விடை: இலங்கை ஜனாதிபதியைத் தெரிந்தெடுக்கும் போட்டியில் போதிய பொதுசன வாக்குகளைப் பெறமல், 'ஜே வீ. பி.'யினர் தோற்றுப் போனார்கள். அதேபோல, பொதுத் தேர்தலிலும் அவர்கள் தோல்வி அடைவார்களானல், அவர்கள் திரும்பவும் வன்செயலை நாடிச் செல்வார்கள்.

புரட்சிக் குழுக்களைக் கையாளும் வழிகளில் ஒன்று, பாராளுமன்றப் பாத்திரம் ஏற்கும்படி அவர்களைக் கவர்ந்திழுப்பதாகும். அப்படித்தான் நான் இன்னமும் நினைக்கிறேன். எதைத்தான் சொன்னலும், பாராளுமன்ற ஆட்சிமுறை இலங்கையில் நன்கு பரீட்சார்த்தமான ஒன்றுதானே?

வினா: நீங்கள் 'உள்ளே இழுத்துவைத்துள்ள' குழுக்கள் இன்னமும் இரண்டுமூன்று உள்ளன...

விடை: சிறிய குழுக்கள். கோழைத்தனமான வன்செயல்களில் ஈடுபட அவர்கள் முயன்றுகொண்டு இருந்தார்கள்.

வினா: செயல்புரிய முயன்றுகொண்டு...?

விடை: சரி.. சதி செய்துகொண்டு, தயாராகிக்கொண்டு...

ஓர் உடன்பாடு காணப்படாவிட்டால், ஒரு நீதிமன்றத்தில் வைத்து அவர்களை விளங்க வேண்டிவரும்.

வினா: நாற்பத்தொன்பது பேர் மாத்திரம் தடுப்புக்காவலில் உள்ளனர் என நீங்கள் பாராளுமன்றத்திற் சொல்லியிருக்கிறீர்கள்....

விடை: அது அவ்வேளை.

வினா: அரசியற்கைதிகளின் விடுதலைக்கான இயக்கம் என ஒன்றுண்டு. இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கைதிகள் இருக்கிறார்கள் என அந்த இயக்கத்தின் தலைவர் கூறுகிறாரே.

விடை: அவர்களின் பெயர்கள் என்ன? அப்பெயர்கள் கொண்ட ஒரு பட்டியலை அவர் என்னிடம் தரவில்லையே.

வினா: திரும்பவும். தீர்வு என்ற விடயத்துக்கு வருவோமா? தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுடன் கதைப்பதற்குத் தூதுவர் ஒருவரை அனுப்பும் திட்டங்கள் ஏதாவது உங்களிடம் உள்ளனவா?

விடை: அதையிட்டு எம்மும் திட்டங்கள் எவையேனும் கிடையா. ஆனல் ஜனாதிபதி அதைப் பற்றிக் கூறியுள்ளார். அவர்கள் வன்முறைகளைக் கைவிடுவார்களாயின், அவர்களுடன் உரையாடல்களை ஆரம்பித்து நடத்துவதில் எந்தச் சிரமமும் இராது என அவர் தெரிவித்துள்ளார். தீர்வுகாண்பதற்கு ஒரேயொரு வழி, வன்முறைதான் என்றே பெரும்பாலான பயங்கரவாதிகள் நம்பியிருக்கிறார்கள். அதுதான் தற்போதுள்ள பிரச்சினை.

அன்றொரு நாள் எமது அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டு வினவியுள்ளது போல; 'மூன்று வருடங்களாக அவர்கள் போரிட்டு வருகின்றனர். அவ்வளவுக்கும் அவர்களுக்குக் கிடைத்துள்ளது தான் என்ன? இதனல் எதுவித பயனும் கிடையாது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்'.

> அமைச்சர் அத்துலத்முதலியின் பேட்டியின் இறுதிப் பகுதி. முதன் மூன்று பகுதியும் கடந்த மூன்று தினங்களாக ஈழமுரசுவில் வெளியானது.

வினா: உள்ளதைச் சொல்வதானல், அதனைச் செய்துகொள்வதற்கு மிகச் சிறந்த வழி, அவர்களோடு உரையாடுவதேயாகும். எடுத்துக் காட்டாக, இந்தியக் குடியரசில், பஞ்சாப் மாநிலம் இருக்கிறது. அதையும்விட அஸாம் மாநிலத்தைஎடுத்துக் கொள்வோமே. அங்கு வன்செயல்கள் நிலவின. அவற்றுக்குப்பொறுப்பாக இருந்தவர்களோடு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இணக்க உரையாடல்கள் நிகழ்த்தினர். அதன் விளைவாக இப்பொழுது அங்கு நிலவுவது சமாதானம்.

விடை: அதனை நாம் திம்பு மாநகரில் செய்து பார்த்தோம்.

வினா: ஆனலும், அங்கு அரசியல்வாதி எவரும் செல்லவில்லையே?

விடை: அதைப் பார்க்கப் போனல், அவர்களது உச்சமட்ட, முதல் வரிசை, தலைவர்கள்தானும் அங்கு போகவில்லையே! அவர்களிடம் அனேக அரசியல் வாதிகள் இல்லை. இன்றும் அது தெட்டத் தெளிவாகியிருக்கிறது. (தமிழர் ஐக்கிய விடுதலை) கூட்டணியிடம் இருக்கிறார்கள். இராணுவ கொமாண்டர்கள் (ரவுநர்கள்) மட்டுமே போராளிகளிடம் இருக்கிறார்கள். ஆனல் அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு வருவார்கள். அது ஒரு தவறு என இந்தியர்கள் அவர்களிடம் கூறியுள்ளார்கள்.

வினா: இப்பகடையாட்டத்தில் மற்றத் தரப்பினர் அடுத்தபடியாகக் 'காயை நகர்த்தட்டும்' என இரு சாராரும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்களா, என்ன?

விடை: சரியான நிலைமை அதுவல்லவே. ஏனெனில் அரசியல் கட்சிகளின் மாநாடு தமிழர் தரப்பிடமிருந்து பிரேரணைகளை, தீர்வுக்கான ஆலோசனைகளை கோரியுள்ளது. எனவே இப்பொழுது 'பந்து' விழுந்திருப்பது தமிழரின் 'கோட்டினுள்'.

வினா: போராளிகளை உள்ளடக்காத உடன்பாடு எதுவும் பயனற்றது: இதனை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

விடை: பயனில்லாதது அல்ல. ஆனல் ஒன்று: எந்தவொரு உடன்படிக்கையினதும் அடித்தளம் ஒடுங்க ஒடுங்க, அதன் உறுதிப்பாடும், வலிமையும் குறைந்துகொண்டே போகும். அம்மாநாட்டிற் பங்குபற்றுமாறு அழைப்புப் பெற்ற சில கட்சிகள் அங்கு சமுகந் தரவில்லை. அங்ஙனம் சமுகமளிக்காத கட்சிகளிடம், 'மாநாட்டுக் கதவுகள் உங்கள் போன்றவர்களை வரவேற்க இன்னமும் திறந்தபடியே உள்ளன' என நான் கூறிவைத்தது அதனலேயே ஆகும்.

வினா: இறுதியாக சென்ற ஆண்டு நீங்கள் எமக்கு எடுத்து இயம்பிய ஓர் அரசியல் பாடம் எனது நினைவுக்குத் தற்போது வருகிறது. உன்னத இலட்சியக்கலை, ஒன்று. சாத்தியக்கலை, வேறு ஒன்று. இவை இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாடுதான் நீங்கள் அரசியலில் முதன்முதலில் கற்ற பாடங்களில் ஒன்று என்றீர்களே.

இக் காலகட்டத்தில், இலங்கைக்கான உன்னத குறிக்கோள்கள் யாவை?

விடை; ஓர் உடன்பாடு காணப்படும். காணப்பட்டதும் எமது பிரயத்தனங்களை நாம் தளரவிடல் ஆகாது. இலங்கையில் மனித இனப் பிரச்சினை தொடரும் ஒரு பிரச்சினையாகும். இதனை நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும். உணர்வதோடு, தொடர்ந்தும் நாம் அப் பிரச்சினையைக் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்ளப் பாடுபட்டு உழைத்தபடி இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும், அதற்கே தனிப்பட பிரத்தியேகமாக உரிய தனிப்பண்புகள் உண்டு. அவற்றை விட்டுவிடும் வண்ணம் அச் சமுதாயத்தினை நாம் கேட்டலாகாது. கேளாது எமது சமுதாயங்களை ஒருங்கு இணைப்பது எப்படி என நாம் வழிவகைகளை ஆராயவேண்டும்.

ஒரு சமுதாய மக்கள், தமது சொந்தச் சமுதாயத்தினையிட்டுப் பெருமிதம் அடைகின்றனர். அதை மட்டுமல்லாது ஏனைய சமுதாயங்களையும் கொண்டது எமது இலங்கை நாடு. எனவே, அதேசமயம் இந்த ஏனைய சமுதாயங்கள் குறித்தும் நாம் இறும்பூது எய்துதல்வேண்டும். இவ் விடயம் குறித்து நாம் முயற்சி தளரவிடுவதற்கில்லை.

(முற்றும்)


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு விருந்து!

"ஷப்ரு"

வெற்றிக் கிண்ணத்திற்காக

யாழ்ப்பாணம்

கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின்

வெள்ளிவிழா ஆண்டு

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

ஷப்ரு யுனிக்கோ பிறன்ஸ்

ஆதரவில்

யாழ்ப்பாணம்

சென். பற்றிக்ஸ் கல்லூரியின்

ஆயர் தியோகுப்பிள்ளை அரங்கில்

ஆகஸ்ட் 17, 19, 24, 30ஆம்

திகதிகளில்

B/1450


## ஈழமுரசு அனுசரணையுடன்

### யாழ். இலக்கிய வட்டம் நடத்திய இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

### முடிவுகள் - 1985

**முதலாம் பரிசு - ரூபா 500**

"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை"
திரு. கே. ஆர். டேவிட், ஆனைக்கோட்டை.

**இரண்டாம் பரிசு - ரூபா 300**

"நிச்சயிக்கப்படாத நிச்சயங்கள்"
செல்வி சந்திரா தியாகராசா, டருத்துறை

**மூன்றும் பரிசு - ரூபா 200**
(பகிர்ந்தளிக்கப்படுகிறது)

1) "புதிய சமூகம் ஒன்று புடைக்கிறது"
திரு. கோ. மகாலிங்கம், அல்வாய்

2) "நமக்கும் விடியும்"
திரு. மா. பாலசிங்கம், ஊர்காவற்றுறை

**பாராட்டுப் பெறுபவர்கள்**

1) "கரைதேடும் ஓடங்கள்"
செல்வி உமா இராசநாயகம், ஆவரங்கால்

2) "கல்லினுள் ஈரம்"
திருமதி சிவயோகமலர் ஜெயக்குமார், அல்வாய்

3) "உதிர்ந்த சருகுகள்"
செல்வி வசந்தா நல்லதம்பி, சாவகச்சேரி

4) பேசாத கோபுரங்கள்
'வளவை வளவன்', கொடிகாமம்

5) அவர்கள் துணிந்து விட்டார்கள்
திரு. ச. முருகானந்தன், கரணவாய்

நடுவர்களாக வே குமாரசாமி, வண்ணை சே. சிவராஜா ச. பத்மநாதன் ஆகியோர் கடமையாற்றினர்.




உ
முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில்
மஹோற்சவம் - 1986

இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றம்

தேவர் படுந்துயரம் தீர்த்த வடிவேலன்
காவல் இருக்கு — கவலைவிடு! — கோவிலென
நல்லைப் பதியிருக்கு! நாளும் முருகன்பேர்
சொல்லு — பிறக்கும் சுகம்!

— சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

பிரஜைகள் குழுக்கள்

# அகதிகள் மறுவாழ்வுக்கு பரிகாரம் தேட வேண்டும்

(கரவெட்டி)

''வடமராட்சிப் பகுதியில் உள்ள பிரஜைகள் குழுக்கள் தமது பகுதிப் பிரச்சினைகளை தீர்த்து சுயாதீனமாக இயங்கி வருகின்றது. இதே சந்தர்ப்பத்தில் பொதுப்பிரச்சினைகள் எழும் போது வடமராட்சியிலுள்ள அனைத்துப் பிரஜைகள் குழுக்களும் ஒன்று சேர்ந்தே அவை தீர்க்கப்படவேண்டும்.''

இவ்வாறு நெல்லியடி கல்வி அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்ற வல்வெட்டித்துறை, கரவெட்டி, பருத்தித்துறை, பருத்தித்துறைகிழக்குப் பிரதேச பிரஜைகள் குழு ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் உரை நிகழ்த்துகையில் சொன்னார்.

கரவெட்டி பிரஜைகள்குழுத் தலைவர் சட்டத்தரணி திரு.வி. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் ''இன்றைய கால கட்டத்தில்அகதிகளாகவரும்தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கும், அவர்களது குழந்தைகளினது படிப்பிற்கும் தக்க பரிகாரம் காண வடமராட்சிப் பிரஜைகள் குழுக்கள் ஒன்றியம்தகுந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்'' என்றார்.

திரு.பகவத்சிங் பேசுகையில், ''இன்றைய மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கு டிஸ்கோ நடனம், போதைவஸ்து ஆகியவற்றை அறிமுகம் செய்யும் அமைப்புகள் தூக்கியெறியப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.''

மேற்படி கூட்டத்தில்சட்டத்தரணி எம்.கே.முத்துக்குமார், வல்வை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு சஞ்சீவன், ஆகியோருடன் வேறு பலரும் உரை நிகழ்த்தினர்.

ஊழியர்கள்

# கூட்டுறவுத் துறையின் புனிதம் உணர வேண்டும்

(சாவகச்சேரி)

''மக்களின் வாழ்க்கை தர உயர்ச்சிக்கும், நாட்டின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் கூட்டுறவுத்துறையின் சேவை மிக இன்றியமையாததாக அமைந்துள்ளது. கூட்டுறவுத்துறையின் வெற்றி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை சேவை மனப்பான்மை என்பனவற்றிலேயே தங்கியுள்ளது என்பதற்கு எமது இளைப்பாறிய உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையாவை உவமையாகக் கொள்ளலாம்.''

இவ்வாறு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர் திரு. எஸ். வி. வைத்திலிங்கம் (ஜே. பி.) யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளராக இருந்து அண்மையில் இளைப்பாறிய திரு. எம். கந்தையாவுக்குப் புகழாரம் சூட்டினார்.

சாவகச்சேரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இளைப்பாறிய உதவி ஆணையாளர் திரு. கந்தையாவின் சேவை நலன் பாராட்டி அவருக்கு ஓர் பிரியாவிடை விருந்துபசாரம் நடத்தியது. அந்த வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தும்போதே தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது: ''மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவு ஊழியர்கள் தமது சேவைகளின் புனிதத் தன்மையை உணரவேண்டும் என்பதே திரு. கந்தையாவின் குறிக்கோளாகும். அந்த அடிப்படையில் அவர்களின் சேவைகள் சிறப்புற நடந்தன. அவருடைய காலத்தில்சங்கக்கடைகளில் பிரச்சினைகளும் இருந்ததில்லை. சங்க வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்த இவரின் ஓய்வு இத் துறைக்கே ஓர் இழப்பு என்றால் மிகையாகாது.''

கந்தையா தனது பதிலுரையில், ''நான் எனது கடமையில் தவறாது கண்ணுங்கருத்துமாக இருந்தேன்,எனதுகண்ணியமும் கடமை உணர்ச்சியும்தான் இன்று உங்கள் புகழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது என நான்எண்ணுகிறேன் தவிரநான் வேறு எதுவும் பெரிதாகச் செய்யவில்லை என்பது எனது எண்ணம். எனவே கடமை உணர்ச்சி புனிதமானது. எனவே புனிதமான கூட்டுறவு இலாகாவில் நாம் அனைவரும் புனிதமான கடமையை மேற்கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை எமது இளைய ஊழியர்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்'' எனறார்.


The DATACENTER
Centre for Computer Studies
COMPUTER PROGRAMMING
IN
(BASIC & COBOL)

மீண்டும் புதிய வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

வாரநாள் வகுப்பு: — திங்கள் / வெள்ளி
ஆரம்பம்: — 18—08—86 (திங்கள்)
வார இறுதி வகுப்பு: — சனி / ஞாயிறு
ஆரம்பம்: — 23—8—86 (சனி)

விபரங்கட்கு:
The DATACENTER
77, Main Street, Jaffna. (R/24657)



முதலாவது பிறந்த தின வாழ்த்து

நயினை வீரபத்திரர் தேவஸ்தான குரு
பரமேஸ்வர சர்மா, தேவகி தம்பதியின் புதல்வி

பிரதீபா

இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை மட்டுவிலில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, மாமா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, அத்தை ஆகியோர் முருகன் அருளால் பல்கலையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

(R/24640)


# பாசறைகள் மூலம் சிறுவர்கள் நற்பயிற்சிகளை பெறமுடிகிறது

(நல்லூர்)

''சிறுவர்கள் சமுதாயத்திலே நல்ல பிரசைகளாக வளர்வதற்கு வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களை தமது சிறுவயதிலேகற்றுக்கொள்ளவேண்டும் நல்ல ஒழுக்கங்களையும், நல்ல கல்வியையும் சிறுவயதிலேயே அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சியிலே பெற்றோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்குரிய நல்ல காரியங்களையும், நல்ல பயிற்சியையும் இது போன்ற பகல் பாசறைகளில் கற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. வெவ்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்ட இளம் சந்ததியினர் இது போன்ற பாசறைகளில் கலந்து பயிற்சி பெறுவதன் மூலம் ஒருவரை ஒருவர் அறியவும், ஒருவரோடு ஒருவர் பழகிக் கொள்ளவும் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இது போன்ற பாசறைகளை விடுமுறைக் காலங்களில் நடாத்தி வரும் யாழ். வை. எம். சி ஏ. ஸ்தாபனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.''

இவ்வாறு சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயச் சேகரக் குரு அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார், பரி. யோவான் ஆலய ''பிக்'' மண்டபத்தில் நடைபெற்ற யாழ் வை. எம். சி. ஏ. யின் இளைஞர்களுக்கான மூன்று நாள் பகல் பாசறையின் இறுதி நாள் நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தலைவர் பேசுகையில், சிறுவர்களின் நிகழ்ச்சிகள் பெரியோர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. சிறுவர் நல்ல இலட்சியத்துடனும், குறிக்கோளுடனும் வாழ இது போன்ற பாசறைகள் உதவுகின்றன. சிறுவயதிலிருந்தே சிறுவர், சிறுமிகள் நல்ல பழக்கங்களைக் கைக்கொண்டு வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

திருமதி ஜே. சர்வானந்தன் பாசறையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

பாசறைப் பொறுப்பாளர் திரு.ஜே. என். பொன்னையா நன்றி கூறினார்.

மக்கள் அவைக் கூட்டத்தில் எச்சரிக்கை:

# மக்களுக்கு சேவை புரிவதாக கூறிக்கொண்டு ஏமாற்றி வாழ்பவர்கள் இன்று அதிகரிப்பு

(சுண்டுக்குளி)

''மக்களுக்குச் சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றி வாழ முயல்பவர்கள்மீது நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். மக்களுக்குச்சேவை செய்வதற்காக மக்களால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனம் மக்கள் அவையாகும். எமது சேவைகள் மக்களுக்கு எப்படிப் பயன்பட வேண்டும் என்பதை உணர்ந்தே செயலாற்ற வேண்டும். இப்போது அகதிகளுக்குப்புனர்வாழ்வு அளிப்பதாகக் கூறி நிதி சேகரிப்பவர்கள் உண்மையில் புனர்வாழ்வுக்கு உதவுகிறார்களா என்பதை ஆராய வேண்டும்''.

இவ்வாறு கொழும்புத்துறை கிராம சேவை அலுவலர் பிரிவு மக்கள் அவையின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக்கழகப் பிரசாரப் பிரிவுத் தலைவர் திரு. ஆ, கனகசபாபதி கூறினார். இக்கூட்டம் மக்கள் அவைத்தலைவர் திரு. இரா. செல்வராசா ஜே பி. தலைமையில் பாஷையூர் மக்கள் முன்னேற்ற மன்ற சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

'ஈழமுரசு' அதிபர் திரு. மயில் அமிர்தலிங்கம் பேசும் பொழுது குறிப்பிட்டதாவது:

''சமூக சேவையும், தியாக மனப்பான்மையும் உள்ளவர்கள் மக்கள் அவையில் சேர்க்கப்படவேண்டும். பொது மக்களுக்கும் கிராமத்திற்கும் நன்மையளிக்கக்கூடிய பல திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்த வேண்டும். வட்டார ரீதியில் மக்கள் அவை தனது பணிகளைத் துரிதப் படுத்துவதன் மூலம் கிராமங்களை முன்னேற்றலாம். மக்கள் அவையினால் கிடைக்கக்கூடிய முழுமையான பயன்களையும் மக்கள் அனுபவிக்க வேண்டும்.புனர் வாழ்வுக்கழக ஒன்றியம் மூலம் கிராம மட்டத்தில் பல திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளோம்'' என்றார்.

திரு. சி. சி. வரதராஜா, திரு. ஜே. அன்ரன், பாஷையூர் சுக வாழ்வுக்கழகத் தலைவி திருமதி ம. அன்னம்மா, மக்கள் அவைப் பொதுச் செயலாளர் திரு. ஆ. மார்ட்டீன் ஆசிரியர் திரு. அ ஜெ. அண்டர்சன், திரு. ஏ. பாலதாஸ், கே. எஸ். இராசையா, திரு செ. இராசரத்தினம், திரு. ஜோர்ஜ் ஆகியோரும் பேசினர்.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதி

# தொழிலாளர் நலன்கருதி நகரசபையிடம் மகஜர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பகுதி தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. மு.கோணமலை, சுகாதாரத் தொழிலாளர்களின் நலன் கருதி எட்டு அம்சக் கோரிக்கையை, நகராட்சிக் கழகச் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த எட்டு அம்சக் கோரிக்கைகளில் முதலாவது, இச் சுகாதாரத் தொழிலாளர்களின் குடியிருக்கும் வீடுகளின் கூரைகள் புனரமைப்புச் செய்யவேண்டும் என்பதாகும். இம் முதலாவது கோரிக்கையைத் தொடர்ந்து ஆறு வீடுகளின் கூரைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி கூரைகள் புனரமைப்புச் செய்ததின் காரணமாக எதிர்வரும் மழைகாலத்தில் இங்கு வதியும் தொழிலாளர்களும் குடும்பங்களும் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியும். இதைத் தொடர்ந்து நகராட்சி மன்றச் செயலாளர் திரு. நவரத்தினராஜாவுக்கு மேற்படி சங்கமும் தொழிலாளர்களும் நன்றி தெரிவித்துள்ளன.

இரண்டாவது கோரிக்கையான வாசிகசாலை புனரமைப்பு வேலைகளும் நடைபெற்றுள்ளன இதனால் கஷ்டங்களுக்கு மத்தியில் கடமை செய்யும் இத் தொழிலாளர் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்கவும்,பரந்த அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் வசதியளிக்கிறது. இதற்கு சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளது

அதிகாரி திரு. ரீ. நவரத்தினராஜா மீது ஆறு கோரிக்கைகளையும் கூடிய விரைவில் பூர்த்திசெய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

பிரஜைகள் குழு

# ஏழாலை குறைபாடு நீக்க துரிதமான நடவடிக்கை

(சுன்னாகம்)

நீண்டகாலமாக ஏழாலையில் நிலவிவரும் குறைபாடுகளைப் போக்குமுகமாக அண்மையில் கூடிய ஏழாலை பிரஜைகள் குழுக்கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட விருக்கின்றன:

அகதிகள் பிரச்சினைகளும், வெள்ள அழிவு, போக்குவரத்து, சிவில் நிர்வாகம் சம்பந்தமான விடயங்களும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. அகதிகள், வசதியற்றோர் தேவைகளுக்கென நிரந்தரநிதியம் சேகரிப்புக்கென ஏழாலை மேற்கு, தெற்கு, மத்தி, வடக்குப் பிரிவுகளுக்கென உப குழுக்கள் தெரியப்பட்டதோடு அவை செயலிலுமிறங்கியுள்ளன.

நெடுங்கண்ணி (பெரியதம்பிரான்)க் குளம் தூர்ந்துவிட்ட நிலையிலிருப்பதே அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் வெள்ள அழிவுக்குக் காரணமென உணரப்பட்டு அக் குளத்தை ஆழமாக்கும் பணியில் உதவி அரசாங்க அதிபர், விவசாய விரிவாக்கப்பகுதி, ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதுடன் பொதுநல ஸ்தாபனங்களின் சேவையும் பெற்றுக் கொள்வதெனத் தீர்மானிக்கப் பட்டது.

பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் உட்பட ஆயிரக் கணக்கான பொதுமக்கள் போக்குவரத்தில் கஷ்டமுறும் காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட 770 இலக்கவழி பஸ் சேவையை மீளவும் நடத்த நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஏழாலைக் குடிசனப் பரம்பலையும், இடப்பரப்பையும் கவனத்திற்கெடுத்து தற்போது ஒரு கிராமசேவை பிரிவாயியங்குவதற்குப்பதிலாக ஏழாலை வடக்கு, தெற்கு ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானித்து அதற்குப் பின்வரும் காரணங்களை முன்வைக்கவிருக்கின்றனர். இருபதினாயிரம் மக்களும்,ஆறுசதுரமைல் இடப் பரப்பையும் கொண்டுள்ள ஏழாலைக் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கக்கூடிய ஒரு கிராம சேவையாளர் உட்பட இரு கிராமசேவையாளரின் தேவை இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதையும் வலியுறுத்திக் கேட்கவிருக்கின்றனர்.

## மெக்ஸிக்கோமாநாட்டில் முன்வைக்கப்பட்ட

# அணுவாயுத தடையோசனை

# அமெரிக்கா நிராகரித்தது

(வாஷிங்டன்)

ஒருவருட காலத்திற்கு அவை ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்று மெக்ஸிக்கோவில் நடைபெற்ற ஆறு நாடுகளின் மாநாட்டில் விடுக்கப்பட்ட கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலுமுள்ள அணுவாயுத சோதனை நிலையங்களுக்கு அருகாமையில் இயந்திர உபகரணங்களை நிர்மாணித்து அந்நாடுகளில் அத்தகைய பரிசோதனைகள் நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென வும் மெக்ஸிக்கோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற இது சம்பந்தமான மாநாட்டில், ஆர்ஜன்ரீனா, கிரேக்கம், இந்தியா, சுவீடன், தான்சானியா, மெக்ஸிக்கோ ஆகிய ஆறு நாடுகளும் கலந்து கொண்டன.

இவ் ஆறு நாடுகளும் உலகில் அணுவாயுத யுத்தமொன்று ஏற்படுவதைத் தடுப்பதற்கு விருப்புவது பற்றி தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்த அமெரிக்க ராஜதந்திர திணைக்கள அதிகாரி ஒருவர், எனினும் இந்த யோசனைகள் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் இதனால் தாம் இதனை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த யோசனைகள் நிறைவேற்றப்பட்டால் அணுவாயுத யுத்தம் ஏற்படுவது தடுப்பதற்குப் பதிலாக வல்லரசு நாடுகளுக்கிடையேயான அணுவாயுதம் பற்றிய ஏற்றத் தாழ்வு அதிகரிக்குமெனவும் அவர் கூறினார்.

## புதிய அறிவிப்பு

(அச்சுவேலி)

வடபகுதி பாடசாலைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய "கண்காணிப்புக் குழுக்கள்" அமைக்க வேண்டும் என கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

பாடசாலையின் சொத்துக்கள் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்களில் அதிபரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## இன்று

(புங்குடுதீவு)

ஐந்தாம் வகுப்பு (ஆண்டு 6) மாணவர்க்கான புலமைப் பரிசில் பரீட்சை இன்று காலை யாழ். மாவட்டத்தில் உள்ள 83 பரீட்சை நிலையங்களில் நடைபெறும். சுமார் ஒன்பதாயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்கு இந்நிலையங்களில் தோற்றவுள்ளனர்.

கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும்.

## ஆபிரிக்காவில் தொழில் வாய்ப்பு விண்ணப்பப் பத்திரம்

VSO தொழில் நிலையத்தில் பதிவு செய்வதற்காக கீழ்க்காணும் தொழில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் கூறிய விலாசத்துக்கு 1986-08-10, 1986-08-11 திகதிகளில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை சமுகம் அளிக்கவும். விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் பேச எழுத கூடியதாக இருக்க வேண்டும்.

தொழில் விபரம்

Surveyors
Draughtsman Building
Heavy Vehicle Drivers
Mechanics
Nurses
Doctors
Engineers

பதிவு செய்து முடிவுற்றவுடன் VSO தொழில் நிலைய படிவங்கள் தபாலில் விண்ணப்பதாரிக்கு அனுப்பப்படும்.

Half Sheet படிவத்தில் விண்ணப்பதாரியின் பெயர், வயது, பதிவு செய்யப்படவேண்டிய தொழிலின் பெயர், Work experience ஆகிய விபரத்துடன் என்னை நேரில் மேற்கூறிய தினங்களில் சந்திக்கவும்.

விண்ணப்ப படிவங்கள் ஆங்கிலத்தில் 2 பிரதிகளுடன் சமுகம் அளிக்கவும்.

விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்த எழுத்தில் இருக்கவேண்டும்.

எனது விலாசம்:

**T. RAJESWARAN**
30/30, ARULAMPALAM LANE;
ARIYALAI.
JAFFNA

R/24662

## 'இன்னல் அகல இறைவன் துதி பாடல் அவசியம்'

(சரசாலை)

எமது துன்பங்கள் நீங்க இறை வழிபாடு இன்று அவசியமாகிறது. அதுவும் அம்மன் வழிபாடு மிக அவசியமாகும். கைலாசபதியில் திருநேத்திரத்தை அம்பாள் விளையாட்டுக்காகவே பொத்தியது. இது காரணம் தேவி மானிட சட்டை தாங்கி நில உலகில் பிறந்து ஊசி முனையிலும் காஞ்சிபிலும் தவம் செய்தார். அவவின் தவ வலிமையை நாம் மனதில் கொண்டு இப்படியான காலகட்டத்தில் அரிய தவம் விரதம் அனுட்டித்து எமது தீமைகள் அகல அம்பாளை வணங்க வேண்டும்".

இவ்வாறு சாவகச்சேரி வடக்கு இலஞ்சியாரனிய மண்டுவில் அம்மன் ஆலய பத்தொன்பதாவது மண்டலாபிஷேக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சைவப் புலவர் பண்டிதர் திரு. கு. வி. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. சரவணமுத்து தலைமையில் மேற்படி வைபவம் இடம் பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது எமது முன்னோர்கள் மக்களை நல்வழிப்படுத்த, நன்னெறியில் வாழ ஆலயங்களை அமைத்தனர். அவ்வாலயங்களை யாம் பேணிப் பாதுகாத்து வழிபட வேண்டும். இதன் மூலம் பல நன்மைகளை நாம் அடையலாம். பிள்ளைக்கு ஆரம்ப வயதில் இருந்தே சமயக் கல்வியை போதிக்க வேண்டும். இதன் மூலம் பிள்ளைகளுக்கு சிறு வயதில் இருந்தே இறைநம்பிக்கை ஏற்படும் என்றார்.

ஆலய பரிபாலனச் சபை உபதலைவர் ஆசிரியர் திரு. சு. முருகேசு நன்றி நவின்றார்.

## பிறந்தநாள் வாழ்த்து

### ★ ஜெயப்பிரகாஷ் ★

கெற்பேலியைச் சேர்ந்த சுந்தரலிங்கம்- புஷ்பா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெயப்பிரகாஷ் இன்று (10-08-1986) தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், மச்சிமார், மச்சான்மார், நல்லவனாக புகழுடனும், சகல செல்வங்களுடனும் பலநூற்றாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

R/24666

## பிரயாண ஒழுங்குகள்

● கனடா

● சவூதி அரேபியா

● ஈராக்

1. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.
2. சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
3. ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிகவிரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

R/24664

## பிரயாண ஒழுங்குகள்

○ கனடா

○ சவூதி அரேபியா

○ ஈராக்

(1) கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார் செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

பி. குறிப்பு:
அச்சுவேலி ஆஸ்பத்திரி
அருகாமை.

தொடர்பு:

இ. தேவராசா
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

R/24665



உ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அக்ஷய வருடம் ஆனி மாதம் 28-ம் திகதி
(12-07-1986) சனிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி யோகலட்சுமி துரைசாமி
அவர்களின்**

அந்தியேட்டி 11-08-1986 திங்கட்கிழமை
காலை 8 மணியளவில்

மயிலிட்டி - கண்ணகை அம்மன், முருகன் ஆலயங்களுக்கு
முன்னுள்ள மடாலயத்தில்

நடைபெற்று, அதனைத்தொடர்ந்து 11-00 மணியளவில்
எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழக் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

"இலட்சுமி திலகம்"
மயிலிட்டி,
காங்கேசன்துறை.
04-08-86

R/24661

இங்ஙனம்
க. வி. துரைசாமி, (நாயகன்)
பிள்ளைகள் - மருமக்கள்

ஈழமுரசு

## புதிய இறைச்சிக் கடைகள் இழுத்து மூடப்பட்டன!

(சுன்னாகம்)

நாட்டு நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி சுன்னாகம், உடுவில் பகுதிகளில் விரும்பிய விடங்களிலெல்லாம் ஆரம்பித்து நடத்தப்பட்ட இறைச்சிக்கடைகள் யாவும் தற்போது மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்ட இறைச்சி வகைகள் எந்தவொரு சுகாதார பரிசோதகராலும் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதில்லை. இதனால் பாவனைக்குதவாதனவும் மக்கள் வாங்கிச் செல்ல இடமேற்படுகிறது. மக்கள் சுகாதாரத்தைக் கவனத்திற்கொண்டு அனுமதி பெறப்பட்ட கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளில் இதன் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### வன்னி மக்களுக்கு புலிகளின் அறிக்கை

# நல்லவர்கள் போல வேடமிட்டு நடமாட ராணுவம் தயாராகிறது

"பொதுமக்களாகிய உங்களை போராளிகளாகிய எமக்கெதிராக திருப்பும் தந்திரோபாயத்தின் பொருட்டு இராணுவத்தினர் உங்களிடம் அன்பாகப் பழகுவது போல் நடித்துக் கொள்கிறார்கள். உங்களது துன்பத்திலும் துயரத்திலும் அக்கறை கொண்டவர்கள் போல அனுதாபம் காட்டுகிறார்கள். உங்கள் பிள்ளைகளின் கல்வி பாழாகுவதாக முதலைக் கண்ணீர் வடித்துக் கொள்கிறார்கள். தாம் தமிழ் மக்களின் பாதுகாப்புப் படையினர் என்று துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுகிறார்கள். சிலருக்கு அரிசியும், சிலருக்கு மருந்தும் வழங்கி அன்பு காட்டித் தமது நயவஞ்சக வலைக்குள் மக்களைச் சிக்கவைக்க முயல்கின்றார்கள்."

இவ்வாறு கூறும் பிரசுரம் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

வன்னிமாநில மக்களுக்கு விடுதலைப் புலிகளின் வேண்டுகோள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில் குடியேற்றம் என்ற போர்வையில் வன்னிப்பிரதேச எல்லைக் கிராமங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய குண்டர் பட்டாளம் வன்னிப் பகுதியில் குடியமர்த்தப்பட்டது. இறுதியில் சிங்கள ராணுவம் தமிழர் வேட்டையில் இறங்கியுள்ளனர். இதனையடுத்து வன்னிப்பிரதேசம் ரணகளமாக மாறியது. வெறிகொண்ட ராணுவத்தின் கோர தாண்டவத்தினால் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். கிராமங்கள், வயல்கள், கடைகள் எரித்து நாசமாக்கப்பட்டன. வன்னி மாநிலத்தை சிதைக்க முயன்றவர்கள் அங்கிருந்து தமிழர்களை விரட்டியடிக்கும் நோக்கமாகவே இந்த அட்டூழியங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

அன்பார்ந்த வன்னிமக்களே, இந்தச்சிங்கள இனவாத ஓநாய்களை நம்பிவிடாதீர்கள். இவர்கள் வன்னிக்குள் புகுந்து புரிந்த கொடுமைகளை மறந்துவிடாதீர்கள். கிராமங்களை அழித்து, வயல்களை எரித்து, ஈவிரக்கமின்றி அப்பாவி மக்களை வேட்டையாடி அழித்த அதே ஓநாய்கள்தான் இன்று பல்லிளித்தபடி உங்கள்முன் வருகின்றனர். ஆட்டுத்தோல் போர்த்திவரும் இந்த இனவாத ஓநாய்களின் அன்பும், அக்கறையும் வெறும் நயவஞ்சக நடிப்பு என்பதை உணர்ந்து கொள்ளத் தவறவேண்டாம். தமிழ்ப் பாடசாலைகள், கோயில்களை அழித்தும், உங்கள் பாடசாலைகளை முகாம்களாக மாற்றிய இக் கொடியவர்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வியில அக்கறை காட்டுவது போல் நடிப்பதைக் கண்டு ஏமாந்துவிடாதீர்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நயினாதீவுக்கு தினசரி இரண்டு படகுச் சேவைகள்

நயினாதீவு உற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முதல் தினமும் இரு படகுச் சேவைகள் நயினாதீவுக்கும்–குறிகாட்டுவானுக்கும் இடையில நடைபெறுகின்றன.

காலை ஒன்பது மணிக்கும், பத்தரைமணிக்கும் குறிகாட்டுவானில இருந்தும், காலை ஏழு, எட்டு மணிகளுக்கு நயினாதீவில் இருந்தும் படகுகள் புறப்படும். அதேபோல பிற்பகலிலும் முறையே பகல் இரண்டு, நான்கு மணிகளுக்கு குறிகாட்டுவானில் இருந்தும், பிற்பகல் ஒன்றரை, மூன்று மணிகளுக்கு நயினாதீவில் இருந்தும் படகுகள் புறப்படும.

யாத்திரிகர்கள் தொகை அதிகரிக்குமானால் மேலதிக படகு சேவைகள் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.


### மரண அறிவித்தல்

**திருமதி மார்க்கண்டு கெங்கநாயகி**

( இளைப்பாறிய ஆசிரியை – சாவகச்சேரி இந்துக்கல்லூரி )

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பெரிய அரசடி வீதி, சாவகச்சேரி வடக்கில் வசிப்பவருமாகிய திருமதி மார்க்கண்டு கெங்கநாயகி (இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி) 9-8-86 ஆம் திகதி சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் மார்க்கண்டுவின் அன்பு மனைவியாரும், வரகுகராணி, வனிதாமணி, சரவணபவான் (முன்னைநாள் நிலஅளவையாளர்), முத்துக்குமாரசாமி (பிரான்ஸ்), ஆனந்தக்குமாரசாமி (லிகிதர், கமத்தொழில் காப்புறுதிச் சபை, வவுனியா), சதானந்தர் (லிகிதர், காணிக் கந்தோர், கிளிநொச்சி) ஆகியோரின் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-8-86 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

மார்க்கண்டு,
பெரிய அரசடி, சாவகச்சேரி வடக்கு.

R/24668


## விபத்தில் மரணம்

(வண்ணார்பண்ணை)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய ஒருவர் இறந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று காலை பிறவுண் வீதி சந்திக்கும் நாவலர் வீதிக்குமிடையில் நிகழ்ந்த இவ்விபத்தில மரணமானவர் கிளிநொச்சியைச் சேர்ந்த மோகன் (17 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### எனது வெளி...

ஹோகஸ்லி சொன்னார். அங்கிருந்து புதுடில்லி சென்று அங்கும் சுமார் இருவாரங்கள் தங்கியிருந்து, தமது லண்டன் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட பின்னரே அடுத்த நடவடிக்கைகள் பற்றி முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கொட்டியா...

பட்டினிக்கும் ஆளானதாக தீனமான குரலில சொன்னார். சந்திரகாந்திலிங்கம். புகையிரத நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களே தன்னை "கொட்டியா" என்று சொல்லி அடித்ததுடன், தானே புகையிரத மலசலகூட கூரை சீலிங்கை பிடுங்கிவிட்டு, கொட்டியா வெடிகுண்டு வைக்க பிடுங்கினான் என்று கூறியதைக்கேட்டதும் அங்கு நின்ற சிங்கள மக்களும் தன்னை அடிப்பதற்கு பொல்லு கலலுகளுடன் வந்தனர் என்றும, தற்செயலாக தம்மை விசாரித்த பொலிஸ் அதிகாரி வந்து, தன்னை "கொட்டியா" இல்லையென்றும் சொன்னதால் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொண்டதாகவும் சொன்னார் அவர்.

'கொட்டியா' இல்லை என்று சொன்ன பொலிஸ் அதிகாரியை, புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 'தூஷண' வார்த்தைகளால் ஏசி அவரைத் தாக்கவும் முற்பட்டனர் என்றும் கூறினார்.

## சிலிப்பர் கட்டைகளையும் களவாடிச் செல்கின்றனர்

யாழ். குடாநாட்டிலுள்ள ரயில்வே சொத்துக்களைக் களவாடவோ, சேதப்படுத்தவோ வேண்டாமென யாழ். பிரதம ரயில்வேஅதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரயில் விடுதிகளையும், ரயில் நிலையத்தையும், சுற்றிவரப் போடப்பட்டுள்ள சிலிபபர் கட்டைகளைக்கூட சில சமூக விரோத சக்திகள் களவாடிச் செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவை அனைத்தும் பொதுமக்கள் சொத்து. ஆகவே, பொதுமக்கள் ரயில்வே சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் வேண்டியுள்ளார்.

## யாழ். நகர் பகுதிகளில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ்நகரில கடந்த சில நாட்களாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துவருகின்றன.

கடந்தவாரம் மட்டும சுமார் பதினைந்து சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றை திட்டமிட்ட கோஷ்டியே செய்து வருகிறது எனவும் கூறப்படுகிறது.

யாழ். பஸ்நிலையம், நவீன சந்தை, ஆஸ்பத்திரி, சின்னக்கடை, கச்சேரி ஆகிய பகுதிகளில் இத்திருட்டுக்கள் அதிகமாக நடைபெறுகின்றன.

நேற்றுமுன்தினம் நவீன சந்தைக்கு முன்பாகவும், கச்சேரிக்குமுன்பாகவும் முறையே இவ்விரண்டு சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. நேற்றும் பஸ்நிலையத்துக்கு முன்பு ஒன்றும, கஸ்தூரியார் வீதியில் ஒன்றும் களவாடப்பட்டது.

### கொள்ளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் இனம் தெரியாத சிலர் கொள்ளையடித்துச் சென்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

### கட்டைபறிச்சான்...

னர் அளவில் புறப்பட்டு 30 பேரளவில் நடைபவனியாக முன செல்ல மிகுதிப்பேர் எல்ப் வான் ஒன்றில முகாமில் இருந்து 500 யார் தொலைவில வந்து கொண்டிருந்த சமயம் எமது தரப்பினர் வான் மீது றொக்கட் லோஞ்சர் மூலமும், தானியங்கி துப்பாக்கிகள் மூலமும் தாக்கியதில வான் முற்றாக சிதைக்கப்பட்டதுடன் தீப்பற்றி எரிந்தது. அதில் வந்த அனைவரும் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். எமது தரப்பினர் எதுவித சேதமும இன்றி முகாம் திரும்பினர்.

### நல்லூர்...

சமும், 26ம் திகதி கார்த்திகைத் திருவிழாவும், 29ம் திகதி கைலாச வாகனமும், 30ம் திகதி வேல் விமானத் திருவிழாவும், 31ம் திகதி தெண்டாயுதபாணி உற்சவமும், அடுத்த மாதம முதலாம் திகதி சப்பறமும், இரண்டாம் திகதி ரதோற்சவமும், மூன்றாம திகதி தீர்த்தமும், நான்காம் திகதி பூங்காவனமும், ஐந்தாம் திகதி ஸ்ரீ வைரவ மூர்த்தி உற்சவமும் நடைபெறும்.

### திருமலை...

லாகும். இத்தாக்குதலால் அரசிறகு இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலின் போது இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான பல படகுகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. அத்துடன் இத் தாக்குதலின்போது சில ஆயுதங்களும், பெருந்தொகையான தோட்டாக்களும் சக்தி மிக்க தொலைத்தொடர்பு சாதனங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் கைப்பற்றப் பட்டது. இதன்போது எமது தரப்பில் எதுவித இழப்பும ஏற்படவில்லை. இத் தாக்குதலில் எம்மால் சிறைப் பிடிக்கப் பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், தாக்குதல பூர்த்தியானவுடன் விடுவிக்கப்பட்டனர் என்று இங்கு தெரிவிக்கப் பட்டது.

### ஊழியர் மீது ...

போது காணிப் பதிவகத்துக்குள் நுழைந்த ஊழியர் ஒருவர் பற்றி தீவிரமான விசாரணை நடைபெறுவதாக தெரியவந்துள்ளது.

### சுகாதார...

குறைவாக இருப்பதினால் காசோலையை மாற்றமுடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பயணச்செலவு ஆறு ரூபாவாகவோ அல்லது நான்கு ரூபாவாகவோ இருந்தாலும் அதற்கும் காசோலையே வழங்கப்படுகிறதாம்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 10-8-1986 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 22437